**நிகழும் திருவள்ளுவராண்டு விகாரி வருடம் 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் தேதி மார்கழி மாதம் 21 -ம் தேதி திங்கட்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

## பொருள் : 1

இந்நகராட்சிக்கு 14-வது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் 2019-2020-ம் ஆண்டின் கீழ் இயற்கை இடற்பாடுகளால் கீழ்கண்டுள்ள இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளதால் கீழ்கண்டுள்ள பணிகள் யாவும் பேருந்துகள் செல்லும் சாலைகள் குன்டும் குழியுமாக உள்ளதால் இச்சாலைகளை செப்பனிட தொகை ரூ.5,96,03,000/-க்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.27,97,000-யினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வால்பாறை கூட்டுறவு காலனி சர்ச் முதல் மாணவியர் பள்ளி வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 2 | வால்பாறை கூட்டுறவு காலனி மாணவியர் பள்ளி முதல் கலைச்செல்வன் டாக்டர் வீடு வரை வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 3 | வால்பாறை கூட்டுறவு காலனி கலைச்செல்வன் டாக்டர் வீடு முதல் வனகாவலர் அலுவலகம் வரை வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 4 | வால்பாறை கூட்டுறவு காலனி வனகாவலர் அலுவலகம் முதல் மின் கம்பம் வரை வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 5 | வால்பாறை கூட்டுறவு காலனி மின் கம்பம் முதல் பி.ஏ.பி. கேட் வரை வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 6 | சக்தி - தலநார் கி.மீ. 4/8 முதல் 5/2 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 7 | சக்தி - தலநார் கி.மீ. 5/2 முதல் 5/6 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 8 | சக்தி - தலநார் கி.மீ. 5/6 முதல் 6/0 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 9 | சக்தி - தலநார் கி.மீ. 6/0 முதல் 6/4 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 10 | சக்தி - தலநார் கி.மீ. 7/0 முதல் 7/4 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 11 | சக்தி - தலநார் கி.மீ. 7/4 முதல் 7/8 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 12 | சக்தி - தலநார் கி.மீ. 7/8 முதல் 8/2 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| 13 | சக்தி - தலநார் கி.மீ. 8/2 முதல் 8/6 வரை தார் சாலை அமைத்தல் | ரூ.48.00 |
| | **மொத்தம்** | **ரூ.624.00** |

***அலுவலக குறிப்பு***

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**கோப்பு எண்.250/2019/இ1**

**நகரமன்ற தீர்மான எண். 001 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 2

இந்நகராட்சி அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள பழைய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 60 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும் இக்கட்டிடம் தற்போது இடிந்து விழும் நிலையில இருப்பதால் கட்டிடத்தினை இடித்து பாதுகாப்பாக அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் நகரமன்ற கூடம், நகரமன்ற தலைவரின் அறை மற்றும் பணியாளர்களுக்கான அறைகளுடன் புதியதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு செலவீனத் தொகை ரூ.510.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 002 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 3

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1, நாள்.06.01.2020-ம் தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப் பணி பிரிவில் விதிகளின் படியும், நிலைகளின் படியும், நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கேற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அரசாணை நிலை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 02.12.2018-ன் படி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பணியிடங்கள் தரம் உயர்த்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | தற்போதுள்ள பணியிட விவரம் | வகுப்பு | நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்டால் தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிட விபரம் | பணியிடங்களின் எண்ணிக்கை | வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | IV | மேலாளர் | 1 | 1A |
| 2. | - | - | வருவாய் அலுவலர் | 1 | II |
| 3. | - | - | கணக்கர் | 1 | II |

**ஊதிய விவரம்**

| வ.எண் | பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விவரம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | 9300 – 34800 + 4200 | 9300 – 34800 + 4800 GP |
| 2. | வருவாய் அலுவலர் | | 9300 – 34800 + 4300 GP |
| 3. | கணக்கர் | | 9300 – 34800 + 4300 GP |

மேலும், இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக இருப்பதாலும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்து கொண்டே வருவதாலும், இந்நகராட்சிக்கு மேலாளர் பணியிடம் வகுப்பு - IA - லும் வருவாய் அலுவலர் பணியிடம் வகுப்பு - II - லும், கணக்கர் வகுப்பு - II - லும், தரம் உயர்த்தி தோற்றுவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 003 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**